**C.C. No - 12/2022**

**Prosecution PW - 1** திரு**.**அருண்பிரசாத்

**Accused A1, A3 present. A2,A4,A5 absent. 317 petition filed and allowed.**

**19-10-2023**

முதல் விசாரணை தொடர்ச்சி

TN34 H5492 என்ற வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்று சென்ற அதன் உரிமையாளர் இந்நீதிமன்றத்தில் வாகனத்தை இன்று ஆஜர் செய்தார். அந்த வாகனம் சா**.**பொ**.26**.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

பொட்டலங்களை சம்பவ இடத்தில் பிரித்து பார்க்கவில்லை என்றால் பார்த்தேன்.. 23 மூட்டைகளில் ஒவ்வொரு மூட்டையிலும் தலா 14 பொட்டலங்களும் மீதியுள்ள 2 மூட்டைகளில் தலா 12 பொட்டலங்களும் இருந்தது. பொட்டலங்களை பிரிப்பதற்கு முன்பாக அவை டேப் போட்டு சுற்றி இருந்தது. ஒவ்வொரு பொட்டலத்தையும் ஒரு மூளையில் லேசாக பிரித்து பார்த்துவிட்டு மீண்டும் ஒட்டிவிட்டோம். என்னை DSP NIB CID விசாரித்தார். அவர் விசாரணையில் ஒவ்வொரு பொட்டலத்தையும் ஒரு மூளையில் லேசாக பிரித்து பார்த்துவிட்டு மீண்டும் ஒட்டிவிட்டோம் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2 மணிநேரத்தில் சம்பவ இடத்தில் இருந்து நாகப்பட்டிணம் NIB CID அலுவலகம் வந்தோம். அது வரை சான்று பொருட்கள் எங்கள் பொறுப்பில் இருந்தது. சம்பவ இடத்தில் கைப்பற்றிய கஞ்சா பொட்டலங்களை சீலிட்டு பத்திரப்படுத்தி NIB CID அலுவலகத்தில் ஒப்படைக்கவில்லை. NIB CID அலுவலகத்தில் தடயத்தை ஒப்படைத்தபிறகு நான் எந்த ஆவணத்திலும் சாட்சியாக இல்லை. சம்பவ இடத்தில் இருந்து 2 மணிநேரத்தில் நாகப்பட்டிணம் NIB CID அலுவலகத்திற்கு சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சோதனை சம்மத கடிதம் 3 எதிரிகளுக்கும் தனிதனியாக கொடுத்து கையெழுத்து பெற்றேன். 3 எதிரிகளுக்கும் ஒரே சோதனை சம்மத கடிதம் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது அதசாஆ-2 என்றால் சரிதான். 3 எதிரிகளுக்கும் தனிதனியாக சோதனை அறிவிப்பு வழங்கவில்லை என்றால் சரிதான். இரகசிய தகவலை எனது உயர் அதிகாரியான Q பிரிவு குற்ற புலனாய்வு துறை காவல் துணை கண்காணிப்பாளருக்கு அனுப்பினேன். முன் தகவல் அறிக்கையில் எதிரிகளின் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் பதிவு எண், பெயர் இல்லை என்றால் சரிதான். வடுவூர் சோதனை சாவடியில் வடுவூர் காவல் அதிகாரிகள் யாரும் இல்லை. சம்பவ இடத்தில் இருந்து வடுவூர் காவல்நிலையம் அரை கிலோ மீட்டர் தூரம். அதிகாலை 2 மணிக்கு தகவல் கிடைத்தது. சம்பவ இடத்திற்கு 4.30 மணிக்கு சென்றோம், எதிரிகளை 06.30 மணிக்கு கண்டுபிடித்தோம். வடுவூர் காவல் நிலையத்திற்கு

நாங்கள் எந்த தகவலும் கொடுக்கவில்லை. சம்பவ இடத்தில் வீடுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வனகாப்பக அலுவலகம் உள்ளது, அங்குள்ளவர்களை சாட்சியாக அழைக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளை நான் சொன்ன நாள் இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும், எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்து வழக்கிற்கு ஏற்றார் போல் பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.